**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022.**
**வழக்கு சாட்சி – அ.சா. 6.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முரளிதரன். | ஜாதி | |
| தந்தை பெயர் | காமுத்துரை. | தொழில் | எலெக்ட்ரீசியன். |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 31/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, அல்லிநகரத்தில் குடியிருந்துகொண்டு, எலெக்ட்ரீசியனாக வேலை செய்துவருகிறேன். தற்போது, என்னிடம் இந்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவதாக கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 24.04.2018 ஆம் தேதியன்று, காலை 10.00 மணிக்கு, அல்லிநகரத்தில் உள்ள வெள்ளையன் தெருவில் சுரேஷ் என்பவரின் வீட்டருகே நானும், சிவக்குமார் என்பவரும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது, அல்லிநகரம் போலீசார் அங்குவந்து, மருதுபாண்டி, குருவம்மாள் அவர்களுக்கும், காமாட்சி ஆகியோர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக, போலீசார் படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் நானும், சிவக்குமாரும் கையெழுத்துச் செய்தோம். (பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது). இது சம்பந்மாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் எந்த தெருவில் குடியிருந்து வருகிறேன் என்றால், தெற்கு வெள்ளையன் தெருவில் குடியிருந்து வருகிறேன். அ.சா.2 சுரேஷ் என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால், எனக்கு மாமா உறவு முறை ஆவார். நான் பார்வை மகசரில் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்துச் செய்யவில்லை

என்றாலும், அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்பதால், நான் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.16 20:52:55 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**